நாளன்று பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே இந்தப் பத்திரிகைகளில் அவையில் நடக்காத நடவடிக்கை ஒன்றை நடந்ததாக வேண்டுமென்றே பிரசுரித்துள்ளது. இது அவையின் நடவடிக்கைகளைத் தவறாகப் பிரசுரித்தது மட்டுமல்லாமல் அவையின் நடவடிக்கைக்குக் களங்கம் கற்பிக்கிற முறையில் அமையப் பெற்றிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவைக்கென்று ஒரு மரபு இருக்கிறது, ஒரு பாரம்பரியம் இருக்கிறது, ஒரு கடமை இருக்கிறது, கண்ணியங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் உடைத்தெறிகிற பாங்காக மாலை முரசு பத்திரிகையும் மக்கள் செய்திப் பத்திரிகையும் இம்மாமன்றத்தில் நடக்காத ஒன்றை நடந்ததாக ஏதோ ஒரு கற்பனை ஓட்டத்தில் செய்தியை வெளியிட்டிருப்பது அவையைக் களங்கப்படுத்துவதாக அமைகிறது. உண்மை நிலைகளை மக்கள் முன்னால் படம் பிடித்துக் காட்டும் பொறுப்பு பத்திரிகையாளர்களுக்கு இருக்கிறது. ஆனால் தவறான செய்தியை வெளியிட்டு குழப்ப நிலையை உருவாக்க வழி வகுக்கும் தன்மையில் இந்தப் பத்திரிகைகள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்யாமல் ஏதோ மாறுபட்ட திசையில் மக்களை அழைத்துச் செல்லும் பாங்கில் இந்தத் தவறான வேண்டாத நடைபெறாத அவையில் நடக்காத இந்தச் செய்திகளைத் திரட்டி வெளியிட்டிருப்பது இந்தச் சபையை மாசுபடுத்துவதாகும் என்று சொல்லி வீதி ஓரத்தில் நடக்கின்ற மானியங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் இந்தப் பத்திரிகைகள் இந்த அவையில் நடைபெறாத நிகழ்ச்சிகளைத் தங்களுடைய கருத்தோட்டத்திற்குக் கொண்டுவர முடியாமல் இப்படிப்பட்ட மரபுகளை எடுத்தெறியும் தன்மையில் ஆளாக்குகின்ற நிலைமையை வளர்க்க வேண்டாம் என்று சொல்லி இது அவை உரிமை மீறல் பிரச்சினையாக இருப்பதால் உரிமைக் குழுவுக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை பத்திரிகைகள் மீது இருப்பதால் அந்தப் பத்திரிகையாசிரியர்களிடமிருந்து விளக்கம் பெற்ற பிறகு தீர்ப்பளிக்கிறேன்.*

(இ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மீது (தீர்ப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 26-ம்நாளன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார்கள். 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27-ம் நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளித்தார்கள்.

* தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

1979 ஏப்ரல் 19]

[பேரவைத் தலைவர்]

1978-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 20-ம் நாளன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடையையும் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 8-ம் நாளன்று அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தையும் கூர்ந்து கவனித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் அளித்த விளக்கத்தையும் நன்கு கவனித்தேன்.

அமைச்சர் அவர்கள் முதலிலிருந்தே சில தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் எனவும் அதனால் நிர்வாகத்தினர் தம் சம்மதத்தைத் திரும்பப் பெற்றனர் என்றும் கூறியிருக்கிறார். எனவே தொழிலாளர்களுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்றோ அல்லது தொழிலாளர்களைப் பற்றி எந்தவிதமான தவறான கருத்தையும் தெரிவித்தார் என்று கூறுவதற்கோ எந்தவிதமான ஆதாரமும் காட்டப்படவில்லை.

எனவே இப்பிரச்சினையில் அவை உரிமை மீறிய செயல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஈ) உணவுத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்கள் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்து அவையில் விளக்கம் அளித்தார். அவர் கொடுத்த அறிவிப்பிலும் அவையில் அளித்த விளக்கத்திலும் மாண்புமிகு அமைச்சர் எந்தெந்த விதத்தில் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்தார் என்பதைப் பற்றி விளக்கமான கருத்து எதுவும் கூறவில்லை.

அதற்கு மாறாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நுகர் பொருள் வாணிபக் கழக ஊழியர்களின் சம்பள விகிதங்களையும், மற்றக் கழகங்களின் ஊழியர்களின் சம்பள விகிதங்களையும் கொடுத்து விளக்கியுள்ளார். மேலும் பொது நிறுவனங்களில் சில லாபத்திலும் சில நட்டத்திலும் நடைபெறுகின்றன என்பதையும் விளக்கியுள்ளார்.

ஆனால் திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த விதத்தில் அவைக்குத் தவறான தகவலை அளித்தார் என்பதைக் கூறாமல் நுகர் பொருள் வாணிபக் கழகம் நட்டத்தில் இயங்குகிறது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்த கருத்தை எடுத்துக்கொண்டு அந்த நட்டம் எதனால் ஏற்பட்டது என்பதை விளக்க முற்பட்டார். இது இப்பிரச்சினைக்குத் தேவை இல்லாதது. அமைச்சர் கொடுத்த தகவல் சரியா, தவறா? தவறு என்றால் எப்படித் தவறு என்பதைத்தான் விளக்க வேண்டும்.

எனவே திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.